செம்மண்

நிலம் 3 துகள் 136 வள்ளுவர் ஆண்டு 2052, 25 மாசி - 03 பங்குனி 2023 வாரமலர் பக்கங்கள் 15



# ஒரு படையணி முழுதையும் துவம்சம் செய்த புலிகள்...!

மொழியாக்கம்
கமலநாதன்

மேஜர் செல்வின் ஷலே என்பவர் கொமாண்டோப் படையணியைச் சேர்ந்தவர். தனது போர்க்கால அனுபவத்தில் தன்னை அதிகம் பாதித்த தாக்குதலாக மன்னகுளம் தாக்குதலைக் குறிப்பிடுகிறார்.

மன்னகுளம் கிராமத்தைக் கைப்பற்ற முனைந்த படைத்தரப்பைப் புலிகள் முற்றாக ஒழித்த சம்பவம் அது என்கிறார். மன்னகுளத்தைக் கைப்பற்றினால் அங்கு நிலைகொண்டு மாங்குளம் பகுதியையும் கனகராஜன்குளம் பகுதி கைப்பற்றும் இலக்கு படையினருக்கு இருந்தது ஆனால், படையினர் முன்னெடுத்த தாக்குதல் வெற்றியளிக்கவில்லை என்றும் குறிப்பிடும் மேஜர் செல்வின் ஷலே "மன்னகுளம் சட்டன" (மன்னகுளம் தாக்குதல்) என்றொரு நூலை எழுதி 2023ஆம் ஆண்டில் இலங்கையின் சுதந்திர தினத்தன்று பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் வைத்து அதை வெளியிட்டார். தனது போர்க்கால அனுபவங்களை நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்திலும் பகிர்ந்துகொண்டார்.



**மன்னகுளம் தாக்குதல்**
மன்னகுளத்தைக் கைப்பற்றும் நோக்குடனான படை முன்னெடுப்பு 1997 டிசம்பர் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதில் சாளி கொமாண்டோப் படையணி முக்கிய பங்கெடுத்தது. இந்த முன்னெடுப்புக்குப் பல முக்கிய படை உயரதிகாரிகள் தலைமை தாங்கினார்கள். எனினும் இந்தச் சண்டை கொமாண்டோ அணிக்குப் பெரிய பின்னடைவையே கொடுத்தது. இறுதித் தோட்டா இருக்கும்வரை படையினர் எவ்வாறு போராடினார்கள் என்பதை விலாவாரியாக எனது மன்னகுளம் தாக்குதல் என்ற நூலில் பதிவு செய்திருக்கிறேன். அங்கு இடம்பெற்ற பல சம்பவங்களில் நான் ஒரு கண் கண்ட சாட்சியாக இருந்தேன்.


**தோல்விக்கான காரணம்**
மன்னகுளம் தாக்குதல் தோல்விக்குப் பல காரணங்கள் இருந்தன. நம்மிடம் இருந்த துப்பாக்கி ரவைகள் முடிந்து விட்டன. நாம் சுற்றிவளைக்கப்பட்ட இடத்துக்கு மேலதிக துருப்புகள் வரமுடியாமல் போயிற்று. புலிகள் தொடர்ச்சியாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். காயப்பட்ட கொமாண்டோக்கள் பின்னரங்க நிலைகளுக்குப் போகத் தயாராக இருக்கவில்லை. இவ்வாறான பல காரணங்களால் ஒரு மணிநேரத் தாக்குதலில் 93கொமாண்டோச் சிப்பாய்களை இழக்க வேண்டியதா யிற்று. சாலிக் கொமாண்டோ அணியில் விடுமுறையில் சென்றவர்களைத் தவிர அந்தப் படைப் பிரிவு முழுமையாக அழிக்கப்பட்டது. மேலதிக துருப்புகளுக்கும் அதிகம் இழப்பு ஏற்பட்டது.



எமது 1-சிஆர் பிரிவின் அணி ஒன்று நாம் சுற்றி வளைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கி முன்னேற முற்பட்டபோது அதையும் புலிகள் இடைமறித்துத் தாக்கினார்கள். அதில் 49கொமாண்டோ சிப்பாய்கள் இறந்தனர். 25க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். சாலிப் படையணியில் எஞ்சியவர்களைச் சேர்த்து மீண்டும் அந்தப் படையணியை உருவாக்க முடியாத நிலை காணப்பட்டதால் அவர்களை டெல்ரா கொமாண்டோ அணியுடன் இணைத்தனர். அதன் பின்னர் சாலி என்ற படையணி இருக்கவேயில்லை.

**லெப்டினன் ராகிக் தலைமையில் தாக்குதல்**
மன்னகுளம் தாக்குதல் தோல்வியடைந்த பின்னர் லெப்ரினன் ராகிக் தலைமையிலான அணி புலிகள் மீது அம்புஸ் எனப்படும் பதுங்கியிருந்து தாக்கும் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு பல புலிகளைக் கொன்றது.

**எங்கு தவறு நடந்தது**
மன்னகுளம் தாக்குதலில் கொமாண்டோக்களுக்கு அதிக இழப்புக்கள் ஏற்படக்கூடிய நிலை எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிப் பின்னர் ஆராய்ந்தபோது சில உண்மைகள் தெரியவந்தன. மன்னன்குளம் பகுதியில் படையினர் தாக்குதலை மேற்கொள்ளவிருக்கின்றனர் என்ற உளவுத் தகவல்கள் புலிகளுக்கு ஏற்கனவே கிடைத்திருக்கின்றன. எமது உளவு பற்றியும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அதனால் அவர்கள் இத்தாக்குதலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி நன்கு திட்டமிட்டு உரிய இடங்களில் முக்கிய ஆயுதங்களை நிலைநிறுத்தி தாக்குதலை முறியடிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தனர் என்று புலிகளின் தளபதிகளில் ஒருவரான கருணா அம்




மானுடன் பின்னர் நான் மேற்கொண்ட உரையாடலின்போது அறிய முடிந்தது. புலிகளின் தரப்பில் இத்தாக்குதலை எதிர்கொள்வதற்குத் தளபதி பானு தலைமையிலான அணி தயாராக இருந்தது என்றும் கருணா சொன்னதிலிருந்து அறிய முடிந்தது.

(தொடரும்)

# முல்லைத்தீவுக்குள் காவல் பதித்த ஹக்கீம்



நியூட்டன்

1981ஆம் ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசை உருவாக்குவதற்கு அஷ்ரப் திட்டமிட்டார். அதை அறிந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் அவரிடம் சென்று இணைந்த வடக்குக் கிழக்கில் இஸ்லாமிய தமிழர் என்ற அடையாளத்துடன் முஸ்லிம்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தித் தருவோம் என்று கூறி தனிக் கட்சி அமைக்கும் அவரது எண்ணத்தைக் கைவிடுமாறு கூறினர். அஷ்ரப் அதை ஏற்கவில்லை. முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் கவனிப்பதற்கு ஒரு தனியான கட்சி அவசியம். எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவோம் என்றார்.

**அஷ்ரப்பின் அரசியல்**

அம்பாறை மாவட்டத்தில் காரியப்பர் குடும்பம் மிகவும் செல்வாக்கு மிக்கதாக இருந்தது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலேயே காரியப்பர் குடும்பத்தினர் தமது அரசியலை ஆரம்பித்தார்கள். அந்தக் கட்சியில் இருந்துகொண்டு தமக்கென ஓர் அங்கீகாரத்தை அரசியலில் நிலைநிறுத்திக்கொண்ட பின் அதை விட்டு விலகித் தனியாக அரசியலில் இறங்கினார் அஷ்ரப். 1976இல் அமிர்தலிங்கம் அறிவித்த தனித் தமிழீழம் என்பதை அஷ்ரப்பும், சௌமிய மூர்த்தி தொண்டமானும் ஏற்றுக்கொள்ளவில்லை. முஸ்லிம்களும் மலையகத் தமிழரும் தனியான தேசிய இனங்கள் என்ற கருத்துருவாக்கம் அவ்விரு தலைவர்களிடமும் இருந்தது. ஆனாலோ, என்னால் தமிழீழத்தைப் பெற்றுத்தர முடியாவிட்டால் அஷ்ரப் அதைப் பெற்றுத் தருவார் எனப் பல மேடைகளில் அமிர்தலிங்கம் பேசினார். அப்படி எதற்கும் அவர்கள் உடன்படக்கூட இல்லை. இவ்வாறாகவே முஸ்லிம்களினது அரசியல் போக்கு இருந்து வருகிறது.

**முல்லைத்தீவு உள்ளூரட்சி சபை**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவைக் கையளித்ததில் ஏற்பட்ட சிக்கலால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. அந்தத் தொகுதியில் தராசு சின்னத்தில் போட்டியிடுகின்ற கட்சியானது ரவூப் ஹக்கீமின் பிணாமிக் கட்சி எனக் கருதப்படுகின்றது. அந்தக் கட்சி சார்பில் வேட்புமனுவைக் கையளித்தவர்களை அதிலிருந்து விலகச் செய்துவிட்டு தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களை அந்தச் சின்னத்தில் போட்டியிடச் செய்வதற்குரிய ஏற்பாடுகள் நடக்கின்றன. ரவூப் ஹக்கீம் இதை முன்வந்து தமிழ் அரசுக் கட்சியினருக்குச் செய்தார் என்றும் அதற்காகக் ஹக்கீமுக்குச் சுமந்திரன் நன்றி தெரிவித்தார் என்றும்கூடத் தெரிய வருகிறது. 1981இல் முஸ்லிம்களுக்கு அபயமளிக்க முன்வந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியானது இன்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் ஆலோசனைக்குத் தலையசைக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. இது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேய்வையும் ஹக்கீம்போன்ற முஸ்லிம் தலைவர்களின் சூட்சுமமான முன்னெடுப்புகளையுமே காட்டுகிறது.

**என்ன சொல்கிறார் கருணாகரம்....?**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தேர்தல் வியூகம் ஒன்றிற்காகவே பிரிந்து நிற்கிறது. தேர்தல் முடிந்த பின்னர் இணைந்து செயற்படுவோம் என்று அந்தத் தரப்பினர் ஊடகங்களில் கூறிவருவது பொய் - என்கிறார் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினரான கோவிந்தம் கருணாகரம். அவ்வாறான ஒரு புரிந்துணர்வு இருக்குமாயின் குத்துவிளக்குச் சின்னத்தில் கரைத்துறைப்பற்றில் போட்டியிடுகின்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து கரைதுறைப்பற்றில் அவர்களை வெற்றிபெற வைத்திருக்கலாம். அல்லாமல் முஸ்லிம் கட்சியின் காலில்போய் விழுந்திருக்கத் தேவையில்லை.

**தமிழ் அரசுக் கட்சிக்கு நெருக்கடி**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ரிசாத் பதியுதீனின் செல்வாக்கு அதிகம் இருக்கிறது. அங்குள்ள பல இடங்களில் காணிகளைக் கையகப்படுத்தும் முயற்சிகள் அவரது பின்னணியில் முன்னெடுக்கப்பட்டபோது வடமாகாண சபை உறுப்பினராக அப்போதிருந்த சிலர் அதற்கெதிராக

ஆர்ப்பாட்டம் செய்து அதைத் தடுத்தார்கள். மீண்டும் ரிசாத்பதியுதீன் பலமான நிலையில் களமிறங்கினால் தமது அரசியல் இருப்புக்கு அது பாதகமாகி விடும் என்பதால் ரிசத்தை நேரடியாக எதிர்க்க முடியாத நிலையில் ரவூப் ஹக்கீமைக் களமிறக்கியிருப்பது தெரிகிறது. ஆனால், இதன் மூலம் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் நேரடியாகத் தமிழ்மக்கள் மத்தியில் பரப்புரைகளைச் செய்யும். தமிழ் அரசுக் கட்சியை வெற்றிபெற வைப்பது மாத்திரம் இதில் நடக்காது. தமிழ் அரசுக் கட்சியினருக்கு அளித்த ஆதரவைப் பயன்படுத்தித் தமது இலக்குகளையும் அடைய வாய்ப்புகளுண்டு. அத்தோடு முஸ்லிம் தலைவர்கள் தமிழ்த் தலைவர்கள்போல நிபந்தனையின்றி எதையும் செய்ய மாட்டார்கள். இந்த மறைமுக ஒப்பந்தம் குறித்துத் தற்போது யாரும் வெளியில் கூறப்போவதுமில்லை. ரவூப் ஹக்கீம் தலைமையிலான கட்சியைச் செங்கம்பளம் விரித்து வரவேற்பதால் தமிழ் மக்களோ தமிழ் அரசுக் கட்சியோ எந்த நன்மைகளையும் அடையப்போவதில்லை. மாறாக அதிகம் பாதிக்கப்படுவது மக்களாகத்தான் இருக்கப்போகிறது.

---

## வாசுதேவனின் கவிதைகள்

### ஊஞ்சல்

உங்கள்
நுனிக் கதிரையில்
அமர்ந்து கொள்கிறேன்

மிகவும் சவுகரியமாக இருக்கிறது!

சாய்ந்து உட்கார்வதற்கும்
சட்டென்று எழுந்து விடுவதற்கும்
இடையிலொரு ஊசல் அமர்வு!

உங்கள் புன்னகையை
நம்பத் தயாரில்லை
என்னை
ஒரு பாதுகாப்பு வலயத்துள்
பேண விரும்புகிறேன்

சாய்ந்தபடி
அமர்ந்திருந்துவிட்டு
உடைந்து எழுவதைவிட
நுனியில் தொங்கியபடி
உதிர்ந்துவிடுதல் இலகு

என் முதுகுக்கும்
உங்கள் இருக்கையின்
பின் தடுப்புக்கும் இடையில்
எப்படி வந்தது
நெருங்க முடியாத
இத்தனை பெரிய இடைவெளி

### பேரடிமை

கடவுள் தினமும்
என்னிடம் வருகிறார்

அவர் கேட்பதை
நான் கொடுக்கும்வரை
என்னைவிட்டுப் போகமாட்டார்

கொடுத்தால்
இன்னும்கொஞ்சநேர வாழ்வை
எனக்குப் பரிசளித்துவிட்டு
விடைபெறுவார்

தன்னைக் கும்பிடுமாறு
அவர் கேட்பதில்லை
தன் மீது மலர் சொரியவும் சொல்வதில்லை

கேட்பதெல்லாம்
கொஞ்சம் நெல் மணிகள்
கொஞ்சம் காய் கறிகள்
கொஞ்சம் மீன்கள்
கொஞ்சம் தண்ணீர்

அவர் பரிசுக்குப் பேரடிமை நான்!

உங்களிடமும்
நாளுக்கு மூன்றுவேளை
அவர் வரவே செய்கிறார்
ஆனால், நீங்கள்
பசி வந்திருப்பதாகச் சொல்கிறீர்கள்

# பளையில் முஸ்லிம்களுக்குக் காணிகள்...!

**ரவீந்திரன்**

**2009**இல் போர் முடிவுக்கு வந்ததும் போருக்குள் அகப்பட்டுப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர். வீட்டுத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இவ்வாறு குடியமர்ந்த புதிய பல குடும்பங்களுக்கு உறுதிக் காணிகள் இல்லாதிருந்தன. அந்த மக்கள் வீடுகள் அமைப்பதற்காக அரச காணிகளைப் பெறுவதற்கு முயற்சிகளை எடுத்தபோதும் அரச காணி என்று இங்கு ஒன்றும் இல்லை என்ற நிலையிலேயே உரிய அதிகாரிகளால் பதில் கூறப்பட்டது. போரால் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் இருக்க இடமின்றிப் பெரும் சிரமப்பட்டார்கள். ஆனால், தற்போது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பொறுப்பில் 45 ஏக்கர் காணிகள் இருக்கின்றன என்றும் காணிகள் இல்லாமல் யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற 300 முஸ்லிம் குடும்பங்களுக்கு 2பரப்புகள் என்ற அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் அண்மையில் செய்திகள் வெளியாகியுள்ளன.

**பிரதேச செயலர்களின் கடப்பாடு**

அரச காணிகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் அதிகாரம் பிரதேச செயலர்களிடம் இருந்தபோதும், அவர்கள் தமிழ் அதிகாரிகளாகவேறு இருந்தும்கூட போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அந்தப் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த அத்தியவசியத் தேவையை நிறைவேற்றிக் கொடுக்கவே



யில்லை. ஒருவேளை இவ்வாறான காணி விவகாரத்தில் குடியேற இருப்பவர்கள் உயர்சாதியினராக இருந்தால் அவை மிக வேகமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கலாம். அடிமட்ட மக்களுக்குத் தமிழ் அதிகாரிகள் காணிகளை வழங்கப் பின்னிற்பது ஓர் எழுதப்படாத நிகழ்ச்சி நிரலாகவே இருக்கிறது.

**தேச வழமைச் சட்டம்**

யாழ்ப்பாணத்துத் தேச வழமைச் சட்டம் என்பது உயர்சாதியினர் தமது கைகளில் நல்ல காணிகளை வைத்திருப்பதற்காக உருவாக்கப்பட்டதாகவே இருக்கிறது. நல்ல விளைநிலங்கள், மேட்டு நிலக் காணிகளைத் தமது கையில் வைத்துக்கொண்டு தரிசு நிலங்கள், மழைகாலத்தில் நீர் தேங்கும் நிலங்கள், கழிவுநீர் வழிந்தோடும் ஓடைகள் ஆகியவற்றைத் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைகளில் கட்டி வைத்திருப்பதாகவே தெரிகிறது. இதனால்தான் அந்த மக்கள் மத்தியில் "ஈழையும் இழுப்பும் எங்களுக்கோ" என்ற பழமொழி கூட உருவாயிற்றோ தெரியவில்லை.

> **யாழ்ப்பாணத்துத் தேச வழமைச் சட்டம் என்பது உயர் சாதியினர் தமது கைகளில் நல்ல காணிகளை வைத்திருப்பதற்காக உருவாக்கப் பட்டதாகவே இருக்கிறது.**

**18**ஆம் நூற்றாண்டின் தொடக்

# இதுகளுந்தான் காரணமோ?



கதிரேசன் காத்தவராயன்

முந்தநாள் சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டை போனன். மாஸ்ரர்தான் தனிய இருந்தார். சுகநயம் கதைச்சுக்கொண்டிருக்க முருகேசர் வந்து இருந்துகொண்டார். கதை அரசியலுக்கை திரும்பிச்சுது. அப்பபாத்து சுதனின்ரை கூட்டாளியள் ரண்டுபேர்வந்து சேந்துகொண்டாங்கள். வழமையாய் வாறவைதான். அதாலை அறிமுகமும் இருந்துது.

'எப்பிடித் தம்பியவை நாட்டுநடப்புகள்?' எண்டு மாஸ்ரர் தொடங்கினார். அதோ சேர்... என்னத்தைச் சொல்ல? நாங்கள் இப்ப பள்ளிக்கூடத்திலை படுகிறபாடு' எண்டு சலிச்சான் ஒருத்தன். 'வரிசம் பிறந்து ஒரு மாதம் உடனயேலீவு... அது தொடங்க இப்ப ஸ்போட்ஸ்மீற்... அதுக்குள்ளை மூண்டாந்தவணை சோதினை ரைம்ரேபிள் வந்திட்டுது..' எண்டு மற்றவன் முடிக்கயில்லை 'ஓஎல் காறற்றை பயிற்சிப் பரீட்சையெண்டுமில்லே ஒண்டு பிறிம்பாய் வந்திருக்குது...' எண்டு முடிச்சான்.

நாங்கள் ஆளையாள் பாத்துக்கொண்டம். அந்த நேரம் சுதனும் வேறை ரண்டுபேரும் வந்து சேந்துகொண்டாங்கள். 'நாட்டிலை எல்லாமே குழப்பந்தான்... ஒண்டும் ஒண்டோடையொண்டு சம்மந்தமே இல்லாமல் ஒரு சிக்கலைத் தீர்க்கிற வழியைவிட இன்னுமின்னும் பெருப்பிக்கிறதுதானே நடக்குது?' எண்டார் மாஸ்ரர்.

'அதிலையும் எங்கடையாக்கள் வலு கெட்டிக்காறர்... எல்லாத்தையும் செய்வினம்... ஒண்டும் உருப்படியாயிராது' எண்டு சலிப்போடை முருகேசர் சொன்னார். 'உண்மைதானே முருகேசுமாமா... எதைத்தான் பிழையில்லாமலுக்குச் செய்யிறம்?' எண்டான் சுதன். 'நேரத்துக்கேற்ற மாதிரிக் கதைக்கிறதை மட்டும் சரியாய்ச் செய்யிறம்...' எண்டொருதன் சொல்லிக்கொண்டிருக்க மற்றாரொருதன் 'காரணங்களைக் கண்டு பிடிக்கிறதிலையும் கெட்டிக்காறரல்லே?' எண்டான்.

'தம்பி அதிலையொரு திருத்தத்தைச் சேர்க்கவேணுமப்பன்... காலங் கடந்துதான் எதையுமே கண்டுபிடிப்பம்' எண்டார் முருகேசர். எல்லாருமாச் சிரிச்சம். 'அதுசரி ஏஎல் பேப்பர் திருத்துகிற வேலையள் என்ன கட்டமாம்?' எண்டு மாஸ்ரர் கேட்டார். 'அதுகும் வழமைமாதிரித்தான் முடிவுகளெண்டு ஒண்டும் எடுக்கேலாதகட்டந்தான்... அது இழுபட இழுபட ஓஎல் காறற்றை நிலையும் இழுபாடுதான்...' எண்டான் ஒராள்.

'அப்ப தம்பியவை தெரியாமல்தான் கேக்கிறன்... இப்ப மூண்டாந்கத்தில் யாழ்ப்பாண ராச்சியத்தின் ஆட்சி எல்லைக்குட்பட்ட குடிகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை எழுத்துமூலமாகத் தொகுக்கும்பொறுப்பு அப்போது திசாவைப் பதவி வகித்த கிளாஸ் ஈசாக் என்பவரால் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண முதலிகள் 12பேரைக் கொண்டு தேச வழமைச் சட்டம் தொகுக்கப்பட்டது. 1707இல் யாழ்ப்பாணத்துக்கான சட்டமாக ஒல்லாந்து அரசால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான காணிப் பாதுகாப்பு மற்றும் வரையறைகள் பற்றி பிரத்தியேகமாக எதுவும் இல்லை. ஆனால், தற்போது வெளிநாடுகளில் அதிக பணம் சம்பாதிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் தேசவழமைச் சட்டத்தைத் தாண்டிக் காணிகளை வாங்கி வருகின்றனர்.

**மத்திய தர வர்க்கக் காணிகள்**

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் பகுதிகளில் மத்திய தர வர்க்கத்துக்குக் காணி வழங்கல் என்ற பெயரில் உயர் பதவி வகித்த உயர் சாதியினர் பலருக்கு பல ஏக்கர் காணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. இவ்வாறாக அன்று தொடங்கி இன்று வரை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குக் காணிகளை வழங்குவதில் தமிழ் அதிகாரிகளே தடையாக இருந்துள்ளார்கள். எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்லாது சிங்கள மக்களுக்கும் அரச காணிகள் வழங்கப்பட்டாலும் தமிழ் அரசியல்வாதிகளால் ஆர்ப்பாட்டங்களை மட்டுமே செய்ய முடியும். முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமது சமூகம் பற்றிய அதிக அக்கறையுடன் செயற்படுகிறார்கள். தமிழ்த் தலைவர்களிடம் அந்தப் பண்டு அறவே கிடையாதுள்ளது.

சென்ற மாதம் ஓட்டமாவடிப் பகுதியில் முஸ்லிம் மக்களால் ஒரு பேரணி நடத்தப்பட்டது. அதன் நோக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச அதிபராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கக் கோருவதே. அதன் மூலமே தமது காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதே அதன் பின்னணி. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதைவிடுத்துக் கற்றுப்போனபின் நித்திரையால் எழும்பும் நிலையிலேயே தமிழ் அரசியல்வாதிகளும் உயரதிகாரிகளும் இருக்கின்றனர். இதனால் தமிழ் மக்கள் தமது சொந்த நாட்டிலேயே நிலமற்றவர்களாக ஆகி வருகின்றனர்.

தவணை முடிஞ்சால் வகுப்புகள் ஏத்தினால் ரண்டு பதினொண்டல்லே வரும்... அவையின்ரை நிலைமை என்ன?' எண்டுகேட்டார் முருகேசர். 'சரியான பிரச்சனைதான் ஐயா... ரைம் ரேபிள் தொடக்கம் வகுப்பறை ஒழுங்கு படுத்துறது வரைக்கும் சிக்கல்தான்...' எண்டுகொண்டிருந்தவனை மறிச்சு மற்றொருதன் 'மேலரிக பயிற்சி.. மொடல் எக்ஸ்ஸாம்...செமினார்எண்டு அதுகளுமல்லே கடுமையான பிரச்சனையாப் போகப்போகுது' எண்டான்மற்றொராள்.

'அதுகள் கிடக்க இப்ப உவ்வளவு பிள்ளையளும் படிக்கிறதுக்கு கறன்ற் தொடந்து கிடைக்குமோ? சாப்பாடு தண்ணிதான் சீராக் கிடைக்குமோ?' எண்டு நான் கேட்டுக்கொண்டிருக்க முருகேசர் குறுக்கிட்டு 'கறன்ற் கிடைக்கிறது ஒரு பக்கம் கிடைக்கிற கறன்றுக்கு கட்ட காசுக்கு எங்கை போறது?' எண்டு கேட்டார். 'சோதினை முடியிற அண்டைக்கு கறன்ற் தொடந்து கிடைக்கும் இப்ப அப்பிடித்தானே நடந்தது' எண்டான் சுதன்.

'வாழுறதுக்கு வல்லியம்மான் சொன்னமாதிரி இயற்கையோட வாழுறதுக்குப் பழகுகிறதுதான் வழி' எண்டு நான் சொல்ல ஆமோதிச்சினம். 'இப்பவும் உதுக்குள்ளையும் எங்கடையாக்களின்ரை கெட்டிக்காறத்தனமொண்டு இருக்குதல்லே? ஆராலும் சொல்லுங்கோ பாப்பம்?' எண்டு புதிர் போட்டான் ஒருத்தன்.

'என்ன தம்பி அது?' எண்டு ஆவலாய்க் கேட்டார் முருகேசர். 'உந்த ஓஎல் காறருக்கு பயிற்சிப் பரீட்சையொண்டு நடக்கப்போகுதெண்டு கதைச்சனாங்களல்லே? ... அந்தச் சோதினைக்கான கேள்விப் பேப்பர் பிடீஎவ்...அதுதான் இன்ரநெற்றிலை எடுத்து அச்சடிக்கவேணும்... பேப்பர் விக்கிற விலையிலை உது சரிவருமோ?' எண்டு சுதன் விளங்கப்படுத்த கனக்க விசயம் விளங்கிச்சுது.

'அதிலை சில பாடங்களை இணையத்திலைதான் செய்யவும் வேணுமாம்...அந்த முறை எல்லாருக்கும் சரிவரா தெண்டு கண்டுபிடிச்சதும் அவங்கள்தான்' எண்டு ஒருதன் சொல்லிச் சிரிச்சான். 'தம்பியவை உதுதான்ரா சரியான வேலை... செய்தம் எண்டும் இருக்கும்...செய்யேல்லையெண்டும் இருக்கும்... செய்யேல்லையெண்டதுக்கு காரணமும் இருக்குமல்லே....ஒரு பக்கத்தாலையும் பிரச்சனை வராதல்லே? பாத்தியளே இதுக்குத்தான் படிச்சவங்கள் நாட்டிலை இருக்க வெணுமெண்டுறதுகண்டியளோ?' எண்டு கொண்டு எழும்பி வந்திட்டன். பின்னாலை பெரிசாய் சிரிப்புச் சத்தம் கேட்டுது.

# எமையறிதல்

## 99

**ஐயங்கொண்டான் சுவாமிகள்**

எமது மனம் விந்தையானது என்பது பல வேளைகளில் மறந்துபோகிறது. மனத்தை நாங்கள் எங்கே தேடுகிறோம் என்பதிலிருந்து நாம் மனம் பற்றி கொண்டுள்ள அறிவை அளவிடமுடியும். மனம் என்பதை நெஞ்சுக்குள் இருக்கிற ஒன்றாகவே அதுவும் இதயமாகவே புரிந்து வைத்திருக்கிறோம். தவறான புள்ளியிலிருந்து புறப்பட்டு எமது விருப்பு என்கிற (மாயப்) புள்ளியைச் சென்றடைய முயல்கிறோம். மனதை நெஞ்சுக்குள் வைத்திருப்பதாக சிறுவயது முதலாக ஊட்டப்பட்ட கருத்துருவே முதற்காரணம் என்பதை யாவது உணர்ந்துள்ளோமா?



யாவற்றையும் பிரயோக செயன்முறைப்படுத்துதலுக்கப்பால்தான் விளங்கி வைத்துள்ளோம். கருத்துருக்கள் எப்போதுமே செயனிலைப்பட்டியங்கக்கூடியதாக இருக்குமா? கருத்துநிலை எதிர் செயல்நிலை என வேறு பிரிக்க முடியுமா? இதில் எது வலியது? பயன்விளைவிப்பது? கருத்து என்பதையும் செயல் என்பதையும் ஒன்றோடொன்று தொடர்பானதென்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இரண்டும் ஒன்றல்ல என்பதை மறந்துவிடக் கூடாது.

கருத்து என்பது செயலுக்கான ஊக்கத்தைத் தருவது. செயலென்பது கருத்திற்கான ஒரு தேவையை உண்டாக்குவது. ஏற்கனவே பதிவாகியிருக்கிற கோட்பாடுகள் படிப்பறிவு மற்றும் பட்டறிவு என்பனவே கருத்தை உருவாக்குகின்றன. இதவும்கூட

கற்பிதமாக இருக்கலாம் என்பது கவனத்திற்குரியது. தேவையே செயலைக்கோரி நிற்கிறது. செயலுக்கான தேவையாக அறிவு உள்ளது. அது முன்குறிப்பிட்ட படியாக கட்டமைக்கப்பட்டதாக இருக்கலாம்.

இங்கேதான் தவறு நேர்கிறது. தேவை என்பது வேறு. ஆசையென்பது வேறென்பதை உணர்ந்து வேறுபடுத்திக் கையாள முடியாமையே அத்தவறா கிறது. அவ்வாறான தவறை உணரக்கூடிய அளவில் எம்மிடம் இருப்பிலுள்ள கருத்துருவாக்கமானது இல்லை என்பதை நாம் ஒருபோதுமே ஏற்றுக்கொள்வ தில்லை. எம்மில்குறைபாடில்லை என்பதையே நம் பிக்கொண்டிருப்பதில் எமது குறைபாடுகள் எம் மையறியாமலேயே எம்முடன் ஒட்டிக்கொண்டே இருக்கின்றன.

நாம் எம்மிடமிருக்கும் எமது குறைபாடுகளை அறிய முயன்றிருக்கிறோமா? இல்லையெனும் பதி லையே உறுதியாகச் சொல்லமுடியம். எமது குறைபாடு களை அறிவதற்குப் பதிலாக நாம் பிறரில் குறைகளைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அதற்கான ஒரு முக்கியமான காரணம் எம்மிடமுள்ள குறைகள் எமக்குத் தெரியாமையே. ஏம்மிடமுள்ள எமக்குள்ளேயே இருக்கும் எமது குறைகளையே அறிய முடியாத நாங்கள்தான் பிறரில் குறைகண்டு பிடிக்க அலைகிறோம்.

எமது குறைகளை அறிந்துகொள்ள நாம் முதலில் எம்மையறிந்துகொள்ள முயலவேண்டும். நாம் என்கிற பன்மைக்குள் நிறைய நான்கள் உண்டு. ஒவ் வொன்றும் ஒவ்வொரு விதமானவை. ஒத்தும் முரண்பட்டும் அவை ஒவ்வொன்றும் தத்தமது மனங்களாலானவையே. ஆக நான் என்கிற ஒரு தனியனிடத்திலுள்ள மனமே அத் தனியனது பல மும் பலவீனமுமாயிருக்கிறது. நாம் எனகிற தொகு திக்குள் உள்ள நான் என்கிற ஒன்றினது மனம் பற் றிய அறிதல் அவசியமாகிறது.

நான் என்கிற நான் எனக்கு வெளியேயுள்ள ஒன் றிடம்தான் என்னை அதாவது என்மனதைத் தேடு கிறேன் என்பதை மறுக்க முடியுமா? ஒப்பீடுகள் வழி யாகவே நான் என்கிற என்னை அறிந்துகொள்ள முடியுமா? மனம் என்கிற மாயப் புள்ளியை திருப்தி யால் நிரப்புவதற்காக எதையெதையோ தேடியலைகி றோம். என்னிடமுள்ள மனதை வேறொன்றால் இட்டு நிரப்ப முயல்கிறோம்.

தேடல் என்பது அதுவும் என்னையறிவதற்கான தேடல் என்பது எனக்கு வெளியேதான் நிகழ்த்தப்படு கிறது. நான் யார்? என்கிற ஒரு வினாவை உண்மை யுடன் எப்போதாவது கெட்டிருக்கிறொமா? கேட்டி ருப்போம் எம்மிடமல்ல பிறரிடம் மட்டுமே. என்னை நான் அறிந்தகொள்ள எனக்கு வெளியே தேடுகிறேன். என்னைப் போலவே தன்னையறிவதில் தவறிழைக் கும் ஒருவன் என்னை எப்படி அறிவான்? என்றா வது எண்ணியிருக்கிறோமா?

நான் என்னையறிய எனக்குள்ளாக என்ன முயற் சிகளை எடுத்திருக்கிறேன்? எனக்கு வெளியே என் னென்ன செய்திருக்கிறேன்? தவறுகள் என்ன? நிறை வுகள் என்ன? எப்போதாவது சிந்தித்துள்ளோமா? இப்போது சிந்திப்போம்.

## வாசுதேவனின் கவிதைகள்



## சூரியன் எனக்குச் சொன்னது!

*என்னை*
*நேரே கண்டால்*
*தாங்க முடியாமல்*
*உன் கண்கள்*
*வழிந்துவிடுமென்றுதான்*
*என் கரத்தால்*
*உன் இமைகளை*
*நானே இழுத்துச் சாத்துகிறேன்*
*நான் இருப்பது*
*உனக்கு*
*என்னைக் காட்ட அல்ல*
*இந்த உலகைக் காட்ட*

*நான்*
*பார்ப்பதற்குரியவன் அல்லன்*
*உன் பார்வையாய் இருப்பவன்*

*உன் கண்*
*இந்த உலகைக் காண*
*படைக்கப்பட்டது*
*என்னைப் பார்க்க முயன்று*
*இமைகளை வருத்தாதே*
*உன் உலகை இருளாக்காதே*
*நிலை தடுமாறாதே*

*நான் இல்லாமல்*
*உனக்குக் காட்சிகள் இல்லை*
*நீ*
*காண்பதெல்லாம்தான்*
*நான்*

*கண்டு களி!*

# சிறைக்குள்...

97



## "அவளைக் கடித்துத் தின்னலாம்போலிருக்கு..."

சிறைச்சாலையிலுள்ள எல்லா வாட்டுக்களுக்குமுரிய பொறுப்பதிகாரிகள் தத்தமது கைதிகளை எண்ணி அழைத்துவந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கவிட்டுக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் பிரிவிலிருந்து சென்றவர்களைச் சிறப்பாகக் கவனித்தார்கள். ஒரே வழக்குகளுடன் தொடர்புபட்டவர்களாகச் சிறைக்குள் இருப்பவர்கள் வெ;வேறு பகுதிகளில் அடைக்கப்பட்டிருப்பார்கள். அவ்வாறானவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது தமக்குள் உள்ள விரோதம் காரணமாக மோதிக்கொள்ளவோ ஒருவரை ஒருவர் கொல்லவோ வாய்ப்பிருக்கும். அதிலும் குறிப்பாகத் தீங்கியல் கைதிகள் எந்த நேரமும் எதையும் செய்யத் தயாராக இருப்பார்கள். இதனால் இவ்வாறானவர்கள் ஒருவரை ஒருவர் கொன்றுவிடக்கூடும் என்ற எதிர்பார்ப்பு சிறை ஊழியர்களிடம் எப்போதும் இருக்கும். அதேவேளை சிறையில் உள்ள ஆயிரக்கணக்கான கைதிகள் ஓரிடத்தில் சேர்ந்து நிற்கும்போது ஏதாவது கலவரம் ஏற்பட்டால் சிறைக்காவலர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதால் அவர்களை இலகுவில் கட்டுப்படுத்திவிட முடியாது. எனவே வெளிக்காவல் கோபுரங்களில் ஆயுதம் தாங்கிய காவல் படையினர் இந்த நேரத்தில் உசார் நிலையில் வைக்கப்படுவர்.

பாடசாலை மாணவர்கள், சிறைச்சாலைப் பெண் ஊழியர்கள் எல்லோரும் பக்தி கீதம் இசைத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சில கைதிகளும் இதில் பங்கேற்றனர். இளம் பெண்கள் பலர் வெள்ளைச்சேலை அணிந்து மேடையில் வரிசையாக நின்றனர். நீண்டகாலம் சிறைக்குள்ளிருக்கும் கைதிகள் பர பரப்பாக அவர்களைப் பார்த்தனர்.

ஒரு குறிப்பிட்ட வெள்ளைப் பிள்ளையைக் காட்டி, "அவளைக் கடித்துத் தின்னலாம்போலிருக்கு..." என்று ஒரு சிங்களக் கைதி கூறினான். சிலவேளையில் அவன் ஏற்கனவே அப்படி எதையாவது செய்துவிட்டுத்தான் நீண்ட காலச் சிறைத் தண்டனையை அனுபவிக்கின்றானோ தெரியவில்லை. நீண்ட காலம் சிறையில் அடைபட்டு இருப்பவனுக்கு வன்மம் அதிகமாக இருக்கவே

தர்மராசா



இந்த வார சமையல்

# வாழைக்காய்க் குழம்பு



வாழைக்காயை அதிகம்பேர் பொரித்துண்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதில் கறி சமைத்துண்ணவும் முடியும். வாழைக்காயில் கறி சமைத்துண்பவர்கள் பலருள்ளனர். இதனால்தான் மொந்தன் எனப்படுகின்ற வாழைக்காயைக் கறி வாழை என்றும் அழைக்கிறார்கள். கறி வாழைக்காயைக் கறியாக்கும்போது சுவை வேறுபட்டிருக்கும். அதுவே அதைப் பொரித்துக் குழம்பாக்கும்போது சுவை இன்னும் அதிகமாயிருக்கும். அந்த வகையில் இம்முறை பொரித்த வாழைக்காய்க் குழம்பை எவ்வாறு ஆக்குவது என்று பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

வாழைக்காய்கள் - 5
செத்தல் மிளகாய்கள் - 3
பெரிய வெங்காயம் - 2
மிளகாய்த்தூள் - 2அல்லது3 தேக்கரண்டி
தேங்காய்ப்பால் - 1அரை டம்ளர்
சீரகம் -- சிறிதளவு
மஞ்சள்தூள் - சிறிதளவு
தேங்காய் எண்ணை -தேவைக்கு ஏற்ப
உப்பு - சிறிதளவு, கறிவேப்பிலை

**எப்படிச் செய்வது...?**

முதலில் வாழைக்காய்களின் தோலைச் சீவி நறுக்கிக் கொள்ளுங்கள். நறுக்கிய வாழைக்காய்களை மஞ்சள்தூள் மற்றும் உப்பிட்டுச் சில நிமிடங்கள் பிரட்டி ஊறவிட்டுப் பொரித்தெடுங்கள். பொரித்ததும் சட்டி ஒன்றில் எண்ணை விட்டுச் செத்தல்களை நறுக்கிப் போட்டு வெங்காயம், சீரகம், கறிவேப்பிலை ஆகியன இட்டுத் தாழித்துக்கொள்ளுங்கள். கையோடு தேங்காய்ப்பால் மற்றும் மிளகாய்த்தூள் ஆகியன சேருங்கள். கொதித்ததும் புளி சேருங்கள். இறுதியாகப் பொரித்து வைத்திருக்கின்ற வாழைக்காய்த் துண்டங்களைப் போட்டு வேகவிடுங்கள். உப்பைச் சரிபார்த்து இறக்குங்கள். சுவை மிகுந்த வாழைக்காய்ப் பொரியல் குழம்பு உங்கள் கைகளில்...! நீர்த் தன்மை குறைவான சற்று இறுக்கமான கறியாக வைத்தால் சுவை அதிகமாக இருக்கும்.

வாய்ப்புண்டு. அது ஆவேசம்போல எழுவதை அவதானிக்க முடிந்தது.

மறுநாள் என்னை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. அதற்குப் பொறுப்பாக விருந்த ஜெயிலர், "நாளை விசாரணை நடக்குமா ...??" என்று என்னிடம் கவலையுடன் கேட் டார். சிறைச்சாலை ஊழியர்கள் சிலரைப் பொறுத்த வரை கைதிகள் எவ்வளவு காலம் சிறையிலிருந்தாலும் அதுபற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. தாங்கள் நேரத்துக்குத் தமது வேலை முடித்து வீடு திரும்பவேண்டும் என்பதாகவே அவர்களது கவலை இருக்கும். நாளை விசாரணை இல்லாவிடில் அவர் நேரத்துக்குத் தனது வீட்டுக்குத் திரும்பலாம் என்று திட்டமிட்டிருந்தார்.

களுத்துறையில் இருந்து கண்டி மேல் நீதிமன்றத்துக்கு வழக்குக்கு வந்திருந்த கணேஷ் என்ற மலையகத்தைச் சேர்ந்த கைதி ஒருவருக்கு மறுவழக்குக்கு 14 மாதத் தவணை போடப்பட்டது. அதைக் கேட்டதும் தலை விறைத்தது. 23.5.2002இல் நீதிமன்றம் சென்ற அவருக்கு அடுத்த தவணை 13.8.2003 அன்று போடப்பட்டது.


2001ஆம் ஆண்டில் எனக்கு 10 மாதத் தவணை போடப்பட்டது. அத்தவனை 27.5.2002இல் வந்தது. அந்த நாள் விமுறை நாள் என்பது நீதிபதிக்குத் தெரிந்திருக்கவில்லை. பௌத்தர்களின் புனித நாளாகக் கருதப்படும் வெசாக் தினத்துக்கு மறுநாள் விடுமுறை நாளாக இருந்ததால் மறுநாளான 28.5.2002இல் கண்டி மேல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டேன். அன்று நீதிபதி விடுமுறையில் சென்றுவிட்டார். என்ன துன்பமடா என்று தோன்றியது. எல்லா வழக்குகளையும் கூப் பிட்டுப் பதிவாளர் மறு தவணை போட்டார். எனது வழக்கைக் கூப்பிடவில்லை. இது விடயமாக அன்று எனக்குப் பொறுப்பாக வந்த சிறை அதிகாரியிடம் கேட்டபோது. அந்த வழக்கு ஏற்கனவே கொழும்பு நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுவிட்டது என்று தெரிய வந்தது. என்னை நீதிமன்ற அலுவலர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு பொறுப்பாக இருந்த பெண் ஊழியரிடம் என்னைக் கதைக்க அனுமதித்தார்கள். அந்த வழக்கு கொழும்புக்கு மாற்றப்பட்டது தொடர்பில் சிறைச்சாலைக் கொமிற்றல் பதிவுப் புத்தகத்தில் எந்தப் பதிவும் இல்லை எனவே வழக்குக் கொழும்புக்கு மாற்றப்பட்டுவிட்டதாகக் கடிதம் ஒன்றைச் சிறைச்சாலை ஊழியர்களுக்கு வழங்கினால் எனக்கு அது உதவியாக இருக்கும் என்றேன்.

தான் கடிதம் ஒன்றை தட்டச்சுச் செய்து தருவதாகவும் ஆனால் அதற்குச் சிறிது தாமதமாகும் என்றும் அவர் கூறினார். இந்த உரையாடல் முடிந்தவுடன் கீழே போவாம் என்று சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி என்னிடம் கூறினார். எனக்கு அருகில் நின்ற ஊழியர் தனது காற்சட்டைப் பொக்கற்றுக்குள் வைத்திருந்த கை விலங்கை எடுத்து எனது கைகளில்போட்டுப் பூட்டியபோது அங்கு கடமையில் இருந்த அனைத்து ஊழியர்களுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. நான் மெதுவாகச் சிரித்துவிட்டு அவ்விடத்தைவிட்டு விலகிச் சென்றேன். அன்று என்னுடன் நீதிமன்றத்துக்கு வந்த குட்டி என்ற மட்டக்களப்பைச் சேர்ந்த நண்பர் விடுதலையானார். (தொடரும்)

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

13

**மு.திருநாவுக்கரசு**




"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது சூதுவாதான முறையைப் பிரயோகித்து 1982ஆம் ஆண்டு பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்றத்தில் 2ஃ3 பெரும்பான்மைப் பலத்தை ஒருவாறு தக்க வைத்தார். ஆனால் அவரது ஆட்சிக்காலம் முடிந்தபின்பு அப்படியொரு நிலைக்குச் சிறிதும் வாய்ப்பில்லாது போனது. அதனால் 1988ஆம் ஆண்டைத் தொடர்ந்து அதாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்பு மேற்படி இனங்கள் தேர்தல் களங்களில் வலு வான சக்திகளாயின. இத்தகைய பின்னணியிலேதான் நாடற்றவர்களாக்கப்பட்டி ருந்த மலையகத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கவதற்காக 2003ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்துக்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரு கட்சிகளுமே இணைந்து வாக்களித்தன. மேற்படி இனவிவகாரத்தில் இது இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட ஓர் அபூர்வ விடயம். இதனால் நாடாளுமன்ற அரசியல் களத்திலும் ஜனாதிபதித் தேர்தல் களத்திலும் மேற்படி இனங்கள் தத்தமக்குரிய அரசியல் பலத்தைப் பிரயோகிக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றபின்பு ஆறு ஆண்டுகளுக்கு மக்களிடம் பேசவேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்காது. அதுகூட இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாய் வருபவருக்குச் சிறிதும் தேவைப்படாது. எனவே ஜனாதிபதி தேர்தற் காலத்தில் பொய் வாக்குறுதிகளை அளித்தாலன்றி உருட்டுப்புரட்டுக்களைச் சொல்லியே மேற்படி இனங்களின்

வாக்குகளைப் பெற்றுப் பின்பு ஏமாற்ற வாய்ப்புண்டு. ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைத் தக்க வைப்பதற்கான விவகாரத்தில் தொடர்ந்து ஏமாற்றுதல் சாத்தியப்படாது என்பதால் மேற்படி இனங்களின் நலன்களை ஓரளவாயினும் அனுசரிக்க வேண்டிய தேவை இருக்கும்.

இப்பின்னணியில் அரசியற்களத்தில் பேரம் பேசும் சக்தி தீர்மானகரமான பாத்திரம் வகிக்கவல்ல மேற்படி இனங்களில் ஒன்றிற்கோ அல்லது பலவற்றுக்கோ ஏற்படும் நிலையுள்ளது. இத்தகைய நிலையில் சமஷ்டிசார் கோரிக்கைகளும் பலமடைய முடிகின்றது. 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா தான் பதவிக்கு வருமிடத்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற் கூறப்பட்ட தீர்வை விடவும் மேலான சமஷ்டி அடிப்படையிலன ஒரு தீர்வைக் காணப்போவதாகக் கூறியிருந்தார். பின்பு அவரது அரசாங்கம் முன்வைத்த தீர்வுப்பொதி ஓர் ஏமாற்றுவித்தையாகப் பிசுபிசுத்துப் போனது.

ஆனால், 2000ஆம் ஆண்டு சந்திரிகா அரசாங்கம் முன்மொழிந்த அரசியல் யாப்பில் காணப்படும் பிராந்திய சபைகள் அமைப்பதற்கான திட்டம் தோல்வியடைந்துபோனமை ஒருபுறமிருக்க அதைப் பற்றி இங்கு ஆராய வேண்டியது அவசியம். இலங்கை ஓர் ஒற்றையாட்சி முறையைக் கொண்ட அரசு என்ற பதம் பிரயோகிக்கப்படவில்லையாயினும் உண்மையில் அது ஒரு சமஷ்டி முறையைக் கொண்ட யாப்பல்ல.

பிரச்சினை இனரீதியானது. அந்த அடிப்படையை ஏற்று அதன்படி பிரச்சினையை அணுக அவர்களுக்கு மனம் இடம்கொடுக்கவில்லை. அதை வெறும் புவியியல் பதத்துக்குள்ளால் பிராந்திய சபை என்றுதான் சிந்திக்கிறார்கள். இப்பிராந்தியப் பிரிப்புக் குறிப்பான இனப்பிரச்சினையை ஓரந்தள்ளிப் பொதுவாக இது சிங்களப் பிராந்தியங்களுக்கும் பொருந்தும் என்பதை உருவாக்குவதுடன், வடக் குக் கிழக்கு என்ற பிராந்திய அடிப்ப டையில் தமிழரைப் பிளக்கவும் வழி செய்யவல்லது. மேலும் மத்திய அர சாங்கம் என்பது முற்றிலும் ஒற்றை யாட்சி முறையைத்தான் கொண்டுள்ளது. இவற்றைவிடப் பிராந்திய சபைகள் பற்றிய உட்கட்டமைப்பில் முன் னவைகளைவிடச் சில முன்னேற்றகரமான அம்சங்கள் உள்ளன. (தொடரும்)

## இந்த வாரச் சொல்

# கீலா

இந்தச் சொல் வினைச் சொல்லாக யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பாவனையிலுள்ளது. தற்புகழ்ச்சிக்காக, பெருமைக்காக, மற்றவர்களை விடத் தன்னை உயர்த்திக் காட்டுவதற்காக ஒருவர் மேற்கொள்ளும் செயலையே இந்தக் கீலா என்பது குறிக்கின்றது.

உதாரணத்துக்கு - யாழ்ப்பாணத்தவர் ஒருவர் புகழ்பெற்ற முருகன் ஆலயத்துக்கு வெள்ளியில் மயில் வாகனம் ஒன்றைச் செய்து கொடுத்தார். அந்த வெள்ளி மயில் வாகனத்தில் முருகன் எழுந்தருளி வந்தபோது அயலில் நின்றவர்கள் குறிப்பிட்ட அந்த நபரின் பெயரைச் சொல்லி புகழ்ந்தார்கள். அதைக் கேட்ட அவர் தனது கழுத்திலிருந்த பெறுமதி மிக்க தங்கச் சங்கிலியைக் கழற்றிப் பக்தர்கள் பார்த்திருக்க முருகனுக்கு அணிவித்தார். அவ்வாறு அவர் செய்த செயலை அவருக்கு ஏற்பட்ட ஒருவித கீலாவில் செய்தார் என்பர்.

அந்தத் தங்கச் சங்கிலியைத் திருப்பித் தருமாறு கேட்டபோது, "நீ கீலாவில் போட்டதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது" என்று ஆலய நிர்வாகத்தினர் கூறினார்களாம்...!

"அவருக்கு விழா ஒன்றை எடுத்து மாலையும் போட்டுப் பொன்னாடையும் போர்த்தினால் அந்தக் கீலாவில் கேட்கிறதைச் செய்து தருவார்"

"அவன் ஒரு கீலாக்காரன் அவன் உருப்படியாக எதையும் செய்ய மாட்டான்"

"அவை ஒரு கீலாவில்போய் அடிபட்டு இப்ப பொலிசில இருக்கினம்"

"அவன் மோட்டார் சைக்கிளில் சனத்துக்குக் கீலா காட்டி அக்சிடன் பட்டுப் போனான்"

"உந்தக் கீலா காட்டுற வேலை உனக்கு வேண்டாம் பேசாமலிரு"

என்பவை இவற்றுக்கு உதாரணங்கள்.

# நாய் நரி பூனைக்கெல்லாம் இந்த ஏரி குளம் குட்டை சொந்தமடா...!

ஹரிஸ்காந்த்


"எஞ்சாய் எஞ்சாமி" என்பது 2021இல் வெளியாகிச் சக்கை போடு போட்ட தமிழ்ப் பாடல். தீ மற்றும் அறிவு ஆகியோர் பாடிய அந்தப் பாடலைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடதவர் இல்லை என்ற அளவுக்குப் பட்டி தொட்டியெங்கும் அந்தப் பாடல் ஓங்கி ஒலித்தது. நம்மவர்கள் எதையும் அறிவுபூர்வமாக அணுகுவதில்லை என்பதைப்போலத்தான் அந்தப் பாடலையும் கேட்டதோடு சரி. கடந்து சென்றுவிட்டார்கள். அந்தப் பாடலின் இசையும், ராகமும், பாடப்பட்ட விதமும் பலரைக் கவர்ந்ததே தவிர அந்தப் பாடல் கூறிய அர்த்தம் புரிந்தவர்களாகப் பலரும் இருக்கவில்லை. அதனால் அந்தப் பாடலால் ஆன பயன் ஏதுமில்லை என்பதாகவே நிலை ஆயிற்று...!

எஞ்சாய் எஞ்சாமி என்கிற பாடலில் பல அர்த்தங்களும், நல்ல விடயங்களும், தெளிவுபடுத்தல்களும் நிறைந்திருக்கின்றன. அந்தப் பாடலில் இடைநடுவே வரும் வரிகளில் "நாய் நரி பூனைக்கெல்லாம் இந்த ஏரி குளம் குட்டை சொந்தமடி" என்றொரு பகுதி வரும். அதன் அர்த்தம் என்னவென்றால், இந்தப் பூமியாளனது மனிதர்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. அனைத்து உயிரினங்களுக்கும் உரியது என்பதாகும். எனது காணி, எனது நிலம், எமது நாடு என்று நிலத்தைக்கூறுபோட்டிருப்பது இங்கு மனிதர்கள் மாத்திரமே. ஆனால் அவர்களைத் தாண்டி இந்த நிலம் இங்குள்ள அனைத்து உயிரினங்களுக்கும்கூடச் சொந்தமானது. அவற்றுக்கும் நிலத்தில் பங்குண்டு - உரிமையுண்டு. ஆனால் மனிதர்கள் தமக்குள் தாமே இந்த விடயத்தில் மோதிக்கொண்டிருக்கிறார்கள். எனது காணி, எனது எல்லை, எனது நாடு என்று வீட்டில் தொடங்கி நாடு வரை எல்லைப் பிரச்சினையும் எல்லையில் மோதல்களும் பெருகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஏனைய உயிரினங்கள் குறித்த புரிந்துணர்வு பற்றி மனிதர்கள் சிந்திப்பார்களா...? என்றால் அதற்குத் துளியும் வழியில்லை என்பதுதான் பதில்.



### வீதிகளில் விலங்குகளை விபத்துக்குள்ளாக்குவது...!

சமூக வலைத்தளங்களில் அண்மையில் அதிகம் பகிரப்பட்ட விடயமாக தெரு நாய்கள், மற்றும் மாடுகளை விபத்துக்குள்ளாக்கும் வாகனங்கள் குறித்த பதிவுகள் அமைந்தன. மனிதர்கள் தமது விருத்தியால் வீதிகளை அமைத்து வாகனங்களில் பயணிக்கிறார்கள். விலங்குகள் தமது பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து மாறாமலிருக்கின்றன. உதாரணமாக யானை தனது வழித்தடத்தால் பயணிப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறது. அதற்குக் குறுக்கே வீதியை அமைத்துவிட்ட மனிதன் யானைத் தொல்லை என்கிறான். அதைப்போலவே நகரம் மற்றும் கிராமங்களில் நாய், பூனை, ஆடு, மாடு என்பவற்றை



விபத்துக்குள்ளாக்குவதும் நடக்கிறது. வீதிச் சமிக்ஞைகளோ, நடைமுறைகளோ தெரியாத நாய், ஆடு, மாடுகளைத் திட்டியும் தீர்க்கிறார்கள். மனிதர்களின் வேகமான வாழ்க்கைக்கு நடுவில் தாமும் வாழவேண்டிய இக்கட்டான நிலையில் அந்த மிருகங்கள் மிகவும் பாதிப்புகளுக்குள்ளாகின்றன.

**காகங்களை விரட்டியடித்த புத்திசாலிகள்**

யாழ்ப்பாணத்தில் பழமையான மர நிழல்கள் காணப்படும் இடங்களில் றக்கா வீதியும் ஒன்று. அங்கு பிரபல பாடசாலைக்கு முன்னாலுள்ள சிறிய நீர்த் தேக்கத்தைச் சுற்றிப் பெரிய மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களில் காக்கைகள் வந்து இரவில் தங்குவது வழமை. மரம் தோன்றிய காலத்திலிருந்து வழக்கத்திலிருந்து வரும் பழக்கம் இது. இப்போது அந்த நீர்த்தேக்கத்தைச் சுற்றிக் கற்கள் பதிக்கப்பட்டுக் கல் இருக்கைகள் நிறுவப்பட்டுவிட்டன. பலர் வந்து அதில் அமர்ந்து அரட்டையடித்துப் பொழுதைக் கழிக்கின்றனர். பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றியிறக்குவோர் அந்த மர நிழலில் தஞ்சமடைகின்றனர். முச்சக்கர வண்டிகள், வாகனங்கள் என்றும் அங்கு நிழல் தேடுகின்றனர். மாலையானதும் தமது சொந்த இடத்துக்கு வரும் காகங்கள் அங்கு ஒன்றுகூடி உறங்கத் தயாராகும்போது அந்த இடமே பறவைகளின் ஒலியால் அழகுபெறுகிறது. காகங்களின் எச்சங்களால் பாதிக்கப்படும் முச்சக்கர வண்டிச்சாரதிகள் மாலையில் மரத்தில் காக்கைகள் கூடும் நேரம் பார்த்து வெடிகொளுத்திப் போட்டும் வானத்தைநோக்கி வெடிகளை ஏவியும் அவற்றைக் கலைத்தார்கள். பார்க்கப் பாவமாகவும் கோபமாகவும் வந்தது. காக்கைக் கூட்டத்தை அவற்றின் சொந்த இருப்பிடத்திலிருந்து கலைக்கும் இந்தச் சமூகம்தான் தாயகத்துக்காகப் போராடும் அறிவுமிகுந்த சமூகமாகவும் இருக்கிறது. ஆகக் குறைந்தது எஞ்சாய் எஞ்சாமி பாடல்கூடக் கடமைக்குக் கேட்கப்பட்டிருக்கிறது. பாரதியார் பாடல்களையே கேட்டுத் திருந்தாதவர்களுக்கு எஞ்சாய் எஞ்சாமி எந்த மூலைக்கு...?

**யாழ்ப்பாணத்தில் பழமையான மர நிழல்கள் காணப்படும் இடங்களில் றக்கா வீதியும் ஒன்று. அங்கு பிரபல பாடசாலைக்கு முன்னாலுள்ள சிறிய நீர்த் தேக்கத்தைச் சுற்றிப் பெரிய மரங்கள் இருக்கின்றன.**

# ஏன்...? அப்படி...?

நட்சத்திரா

46



## "மன்னார் கோச்சிபோல..." என்று சிங்களவர் சொல்வதேன்...?

சிங்கள மக்கள் மத்தியில், "மன்னாராம் கோச்சி வகே" (மன்னார் கோச்சிபோல) என்றொரு பழமொழியுண்டு. இவ்வாறு ஏன் அவர்கள் கூறுகிறார்கள்...? இதன் பின்னாலுள்ள விடயம் என்ன என்று தேடிப்பார்த்தால்...,

முன்னைய காலத்தில் இந்தியாவுக்குச் சென்றுவரும் மலையக மக்கள் குருநாகலுக்குச் சென்று அங்குள்ள ரயில் நிலையத்திலிருந்து ரயிலில் ஏறித் தலைமன்னார் வரை ரயிலில் செல்வர். பின்னர் அங்கிருந்து கப்பல்மூலம் ராமேஸ்வரத்துக்குச் செல்வது வழக்கம். இந்த ரயில் கடலுக்குள் நீண்டதூரம் செல்லக்கூடியவாறு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. ரயிலிலிருந்து நேரடியாகக் கப்பலில் ஏறக்கூடியவாறு அந்தப் பாதை அமைக்கப்பட்டிருக்கும். சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் பல லட்சக்கணக்கான மலையக மக்கள் இந்தப் பாதை வழியாகவே நாடுகடத்தப்பட்டனர்.

இவ்வாறாகக் குருநாகல் ரயில் நிலையத்திலிருந்து தலைமன்னாருக்குச் செல்லும் அந்த ரயிலில் மலையக மக்கள் அதிகளவில் பயணம் செய்யும் வாடிக்கை உண்டாகியிருந்தது. ரயிலுக்குள் நிறைந்திருக்கும் அவர்கள் ஒருவரோடு கதைத்துக்கொண்டிருப்பதால் எல்லா ரயில் பெட்டிகளிலும் அதிக சத்தம் ஏற்படும். மலையக மக்கள் பேசும் தமிழ் மொழி விளங்காத சிங்களவருக்கு அது புதினமான விடயமாகவும் கரைச்சலான விடயமாகவும் இருந்தது. இதனால்தான் பலர் சேர்ந்து பெரிய சத்தமாகக் கதைத்தால், "என்ன மன்னார்கோச்சி போல சத்தமாக இருக்கு" என்று சிங்களவர்கள் தற்போதும் கூறுவதுண்டு. இதுதான் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள மன்னார் கோச்சிபோல என்கிற முதுமொழியின் பின்னாலுள்ள அர்த்தம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிறை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781